# இருவர் தவறு

உச்சி வெயிலில் வாசற் கதவை யாரோ தட்டினார்கள். உள்ளே இளைப்பாறிக் கொள்ளப்படுத்திருந்தவர்களுக்குத்தான் கஷ்டமாகவும் எரிச்சலாகவும் இருந்தது. ஆனால், கதவைத் திறந்துவிட்டு விஷயத்தை அறிந்ததும், அவர்களின் சுணக்கம் அனைத்தும் மலர்ச்சியாயிற்று.

"வெயிலில் நிற்கிறாயேப்பா; ஆகட்டும் என்று சொன்னேன் என்று தெரிவி. போய் வா; கால் சுட்டுப்போகிறது உனக்கு" என்று கனிவுடன் அனுப்பிவைத்தார் ராஜமய்யர், வெளியில் நின்றிருந்த ஆள்காரனை. அவருடைய நண்பர் ஒருவரின் இல்லத்திலே ஒரு நல்ல இசை நிகழ்ச்சி அன்று மாலை நடக்கிறது.

மடிப்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த கணேசன், "பேஷாயிருக்கும் கச்சேரி. பிடில் ஸோலோ பிரமாதமாயிருக்கும் இவர் வாசிப்பு" என்றான்.

அவனுடைய மனைவி பாமாவும், மதனி லட்சுமியும், ஒத்த ஓரகத்திகளாய் லட்சணமாய் எட்டிப் பார்த்து நின்றனர். 'நாமும் போகவேண்டுமே! போக முடியுமா?' என்று பரஸ்பரம் பார்த்துக்கொண்டனர்.

அப்பொழுது ராஜமய்யர் இவர்களிருவரும் இருந்த திக்கை நோக்கினார். "சரியாய் ஐந்து மணிக்குப் புறப்பட்டுப்போய் வாருங்கள்; நான் சற்று மெள்ள வருவேன். திரும்பி வரும்போது என்னுடன் அழைத்து வருகிறேன்; நமக்கு ரொம்ப வேண்டியவர்கள்; போக வேண்டியதுதான். ஐந்து மணிக்கே போங்கள்" என்றார்.

ஒரு மாதமாகவே வெளியில் கிளம்பாமல் வீட்டோடு வளைய வந்த ஓரகத்திகள் இருவருக்கும் பரம சந்தோஷம்.

"மன்னி, நானும் இன்றைக்கு மடிசார்ப் புடைவை உடுத்துகிறேன். போய் உட்கார்ந்து பாட்டுக் கேட்க வேண்டியதுதானே! விசுக்கு விசுக்குன்னு நடக்க வேண்டாமே!" என்று பாமா உடனே உடை, நகை பற்றித் திட்டமிட்டாள்.

"கொள்ளைப் பொழுது கிடக்கிறது, வாயேன்; படு கொஞ்ச நேரம்" என்று சிரித்தாள் லட்சுமி. வெளியில் கிளம்புகிற சமயத்தில் அலமாரியிலிருந்து ஏதோ ஓர் புடைவையை உருவி எடுத்து, உடுத்திக்கொள்ளும் வழக்கமுள்ளவளுக்கு சிரிப்பு வராதா?

கடைசியில் நாலே முக்கால் மணிக்கு லக்ஷ்மி கிரேப் ஸில்க் புடைவையொன்றைத் தழையத் தழைய மடிசார் உடுத்திக் கொண்டு தயாரானபோது, பாமா வியந்தாள். 'மடிசார் கட்ட சரிகை சேலைதான் ரொம்பப் பொருத்தம் என்று நினைத்திருந்தேனே! உம், தினசரி உடுத்தினால் நன்றாகக் கட்டிக்கொள்ள வரும்; எதுவும் சோபிக்கும்!' என்று நினைத்துக்கொண்டாள். தான் உடுத்தியிருந்த கூறைச் சேலையை மாற்றிக்கொள்ளலாம் என்றால் மாமனார் 'நாழியாச்சம்மா' என்று அவசரப்படுத்துவார்.

"ஓ, பேஷாயிருக்கே!" என்று கணவன் சொல்லிவிட்டதற்காகத் திருப்தியுடன் கிளம்பினாள் பாமா. "போய் வறோம்; வந்துவிடுவோம் எட்டு மணிக்கு" என்று கணேசனிடம் லட்சுமியும் பாமாவும் சொல்லிக் கொண்டுவிட்டார்கள். குழந்தைகளை அடுத்த வீட்டிலிருந்த வடக்கத்தி நண்பர்களிடம் அனுப்பியிருந்தார்கள். அத்தையம்மாள் "கவலைப்படாமல் போய் வாங்கடியம்மா" என்றாள். "ஹால் நிறைந்துவிட்டால் சிரமம், சீக்கிரம்!" எனத் துரிதப்படுத்தி அனுப்பிவைத்தான், கணேசன்.

பெண்கள் இருவரும் போய்ச் சேர்ந்தபெழுது, ஓரிருவர்தான் வந்திருந்தனர். அந்த இல்லத்தின் எஜமானி அகிலாம்பாள் இவர்களை வரவேற்று உபசரித்தபின், "அதோ,

அவர்தான் வித்வான். எங்களுக்கு ரொம்ப சிநேகிதம். வாசிக்கச் சொன்னோம், சம்மதித்தார். நமக்குத் தெரிந்த நாலு பேர் வந்து கேட்கட்டுமே என்பது எங்கள் ஆசை" என்றாள்.

"எங்களுக்கும் யோகம்" என்றாள் பாமா. அகிலாம்பாள் பாமாவை உற்றுப்பார்த்துப் புன்னகை புரிந்தாள். பிறகு லட்சுமியை நோக்கி, "ஓர்ப்படிதானே! கூட்டிக்கொண்டு வந்தாயே, சந்தோஷம். மாமனாரும் அகத்துக்காரரும் வருவார்களோன்னோ?" என்று வினவினாள்.

"மாமனார் வருவார். எங்காத்துக்காரர் 'காம்ப்' போயிருக்கிறார். ஊரிலிருந்தாலும்தான் என்ன, எங்கே பாட்டுக் கேட்க ஆசை அவருக்கு?"

"அப்படியா?" என்று அகிலாம்பாளும் சிரித்தபடி நகர்ந்தாள். இன்னும் சில பெண்கள் வருவதைக்கண்டு வரவேற்கப்போனாள்.

பாமா தன் ஓர்ப்படியின் தோளோடு சாய்ந்து மெல்லச் சிரித்து, "மன்னி, அவருடைய தம்பிக்கு மட்டும் ரொம்ப ஆசை, பாட்டு என்றால், ராத்திரி பதினோரு மணிவரை நேஷனல் புரோக்ராம் கேட்பார்" என்றாள். சொன்ன சொல் வாயில் ஊசலாடும்போதே, பிருடை கழன்று சுருதி இறங்கின இசைக் கருவிபோன்று முகத்தில் தளர்ச்சி உண்டாகிவிட்டது. எதிரில் ஹாலின் கிழக்கோரத்திலே பிடில் பெட்டியை வருடியபடி அமர்ந்து கொண்டு பக்கத்திலிருந்தவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார் வித்வான். கைக் கடியாரத்தைப் பார்த்துவிட்டு, "பத்து நிமிஷம் செல்லட்டுமோ?" என்று அவர் கேட்டதையும் பாமா செவியுற்றாள்.

"மன்னி?" என்று அழைத்தாள் பாமா. லட்சுமி சிநேகிதியொருத்தியுடன் பேசிக்கொண்டிருந்தாள். பாமா சட்டென எழுந்தாள். சங்கோசத்துடன் மடிசாரப் புடைவையை சரிப்படுத்திக் கொண்டே, பக்கத்திலிருந்த ஒருகதவின் வழியே உள்ளே மறைந்தாள்.

அங்கிருந்த ஒரு ஜன்னல் வழியாக அகிலாம்பாளை சாடைகாட்டி அழைத்தாள். அந்த அம்மாள் வந்ததும், "மாமி, ஒரு காகிதம் பென்ஸில் தருகிறீர்களா? இன்று மத்தியான்னம் எங்கள் வீட்டுக்குத் தகவல் சொன்ன ஆள் இருக்கிறானோ? எங்காத்துக்காரரை வரச்சொல்லி ஒரு கடிதம் அனுப்புகிறேனே!" என்றாள் பரபரக்க. "அதற்கென்னம்மா; இந்தா எழுது. அனுப்புகிறேன்" என்று பால் கணக்குப் பென்சிலையும் காகிதத்தையும் விரைவில் கொடுத்தாள் அகிலாம்பாள்.

"மூன்று மணி நேரம் இன்னிசை கேட்டு மகிழலாம், வாருங்கள். அங்கே உட்கார்ந்திருப்பதற்கு இங்கேயே உட்கார்ந்திருக்கலாம், பாட்டுக் கேட்டவாறு. ஐந்து நிமிஷத்தில் ஆரம்பமாகிறது" என்று அவசரமாகக் கிறுக்கிக் கையெழுத்திட்டுத் தந்தாள்.

சரக்சரக்கென்று சேலையோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் லக்ஷ்மி. "எங்கே போனே?" என்று பாமாவைக் கேட்டாள்.

"உங்கள் மச்சினரை வரச்சொல்லி எழுதியனுப்பினேன், மன்னி. நல்ல கச்சேரி கேட்பதே எங்களுக்கு ஆபூர்வம். இங்கே உட்கார்ந்தபடியே பாட்டு கேட்க என்ன சிரமம், வரக்கூடாதா?"

லக்ஷ்மி, "ஆமாம், பாவம், வரட்டுமே" என்றாள். அவள் கவனம் முழுதும் வித்வான் பிடிலை எடுத்து முஸ்தீப்புகள் செய்யும் காட்சியிலே ஈடுபட்டிருந்தது. ஒரு காலத்தில் அவள் பிடில் ரொம்பவும் ஆசைப்பட்டதுண்டு. 'வாய்ப்பாட்டு போதும்' என்று பெற்றோர் முடிவு கட்டிவிட்டனர்!

ராஜமய்யர் கையில் தடியும், தலையில் சுற்றிய மப்ளரும், முகத்தில் உவகையுமாக உள்ளே நுழைந்தார். சரியாக நேரம் பார்த்து வந்து சேர்ந்த பூரிப்புடன் அந்த வீட்டின் எஜமானரான தமது நண்பருக்கு அருகில் அமர்ந்தார்.

வித்வான் தமது இசைக் கருவியைத் தம் மார்புடன் இணைத்துக்கொண்டார். மெல்லிய நாதம் ஒலிக்க இரண்டு தடவை வில் போட்டார். இடது கை விரல்களைத் தமது கிராப்புத் தலையில் வருடி, பசை கொடுத்துக்கொண்டார். ஆணும் பெண்ணும் குழுமியிருந்த சபையை ஒரு துறுதுறுப்பான கண்ணோக்குடன் குறுநகையோடு பார்த்துவிட்டு, தமது

கலைத் திறமையைப் பொழியத் துவங்கினார். இந்த ஆரம்பக் காட்சியைக் கணவன் பார்க்கவில்லையே என்ற பாமாவுக்குக் குறை.

"இப்பத்தான் கடுதாசி பார்த்திருப்பார், மன்னி, வர்ணம் முடியும்போது வந்துவிடுவார்."

லக்ஷ்மி "ஆமாம்" என்பதாகக் தலையாட்டினாள். நாட்டக்குறிஞ்சி வர்ணம் நாட்டியமாடுகிற மாதிரி ஜம் ஜம்மென்று முழங்கி, மந்தஹாஸமாக ஓய்ந்து நின்றது.

வாசலைப் பார்த்தாள் பாமா. வேறு யார் யாரோ வந்தார்கள்; உட்கார்ந்தார்கள்.

பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போட்டுக்கொண்டு தொடங்கியது அடுத்து வந்து "வாதாபி கணபதிம் பஜே". கேட்பவர் செவியில் பக்திரஸம் பாய்ந்து கொண்டிருந்தது-கீர்த்தனையின் மெட்டு வழியாகவே.

பாமா தன் மாமனாரைப் பார்த்தாள். அவர் கண்ணை அரைவாசி மூடி இசையின்பம் துய்த்துக்கொண்டிருந்தார். "நீயும் வாயேன்" என்று அவராகவே பிள்ளையை அழைத்து வந்திருக்கக் கூடாதா?

"பிடில் ரொம்ப நன்னாயிருக்கு, மன்னி".

"ஆமாம்".

"ராகமே அப்படிப்பட்டது; குதூகலம்".

"ஆமாம்".

"கடுதாசியைப் பார்த்ததுமே வந்திருந்தால் இதைக் கேட்டிருப்பார் மன்னி; மூன்று பாட்டு ஆச்சு".

"வர நேரமிருக்கு"

'யாராவது ஆட்சேபிக்கிறார்களோ' என்று பேச்சை நிறுத்தி, சுற்றிலும் பார்த்தாள் பாமா. அகிலாம்பாள் தென்பட்டாள். 'ஆள்காரன் இருந்தானோ கடிதம் கொண்டு போக?' என்ற ஐயமுண்டாகியது பாமாவுக்கு.

உதட்டைப் பிதுக்கி, "அவர் வரவில்லை" என அறிவித்து, கையையும் ஆட்டினாள். ஆனால் அகிலாம்பாள் பாமாவின் சேஷ்டையைப் பார்க்காமல், வேறு வேலை எதையோ எண்ணி விரைந்து சென்றாள்.

பயனற்றுப்போன தன்னுடைய அபிநயத்தை எண்ணி வெட்கிப்போன பாமா தலை தாழ்ந்தி, "பார்த்தேளா, மன்னி, வரவில்லை!" என்றாள்.

"உம்"

"வண்டி கூப்பிட யாருமில்லாவிட்டால் நடந்தே கூட வரலாமே மன்னி. கொஞ்ச தூரம்தானே?"

"உம்"

"வண்டியில் ஏறி இறங்குகிறதைவிட மெள்ள நடந்து வருவதே நல்லது, இல்லையா மன்னி."

"வருவார், நாழியாகவில்லை".

"இப்போ வந்தால்தான் பிரயோசனம், மன்னி".

"ஆமாம்".

வாசலைப் பார்த்தாள் பாமா. அகிலாம்பாள் வாசலில் இருந்தாள். எழுந்து போய் மாமியை விசாரித்து அறியலாம் என்றால், இன்றைக்கென்று அவள் கட்டியிருப்பது மடிசார்ப் புடவை. அது எந்தப் பக்கம் தஸ்புஸ்ஸென்றாகிவிட்டதோ? எங்கே இழுத்துக்கொண்டு ஏறத்தாழப் போய்விட்டதோ! இத்தனை பேர்களுக்கு நடுவில் எழுந்து நிற்பதா?

வித்வான் சங்கராபரணத்தை சாங்கோபாங்கமாக இழைத்து இசைத்துக் கொண்டிருந்தார். பாமாவுக்கு இருந்த மனக்குழப்பத்தில் "இது ஏதோ நமக்குத் தெரிந்த ராகம்தான்" என்ற உணர்வு மட்டும் இருந்தது; இன்னதுதான் என்ற தெளிவும் கவனமும் இல்லை.

"இனிமேல் வருவாரா மன்னி? ரொம்ப நாழியாச்சே! அப்பா அதிருப்திப்படுவாரோ என்று வர யோசித்திருப்பார்".

"உம், உம், ஆமாம்."

பாமா தன் மாமனார் பக்கம் பார்த்தாள். நாட்டுப் பெண்கள் பேசியபடி இருக்கிறார்களே என்று சிணுங்குகிற மாதிரி அவரும் இங்கே பார்த்தார். உடனே பாமா ஏதோ ராக சர்ச்சை செய்கிறவன்போன்று முகத்தை வைத்துக் கொண்டுவிட்டாள்! வெளியில் அடர்ந்த இருள் பரவிவிட்டது. இனிமேல் கணவன் வரமாட்டான் என்று தோன்றியது. இத்தனை நேரமும் 'வந்துவிடுவார்' என்று நம்பிக்கை. 'வரவில்லை, வரமாட்டார்' என்றுணர்ந்த பின் 'ஏன்?' என்று ஆராய முற்பட்டது, பாமாவின் பெண் மனம்.

"ஒரு வாரமாய் அக்கம்பக்கம் போய் வருகிறாரே, மன்னி; இது கொஞ்ச தூரம் தானே, துணிந்து வரக்கூடாதா?"

"வரலாமே?"

"இனிமேல் வந்தால் அவருக்கு இடங்கூட இருக்காது மன்னி." அப்பொழுது தான் சில ரசிகர்கள் வந்து கொண்டிருந்தார்கள். இசை நிகழ்ச்சிகளின் பிற்பகுதிதான் இனிமையும் சிறப்பும் கொண்டிருக்கும் என்னும் கருத்துடையவர்கள். இவர்களைப்போலவே கணேசன் வந்தால்?..... . . வந்தால் ஹாலில் உட்கார இடம்?

"அம்மாடி" என்ற ஒரு ஆயாசச்சொல் பாமாவின் செவியில் விழுந்தது. அண்மையில் சுவரில் சாய்ந்திருந்த ஒரு கர்ப்பிணிப் பெண், தன் மடியிலிருந்த குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு, கால் மாற்றி உட்கார்ந்து, மறுபடி குழந்தையை மடியில் ஏற்றிக்கொண்டாள்.

"மன்னி, அவர் வந்தால் கீழே உட்காரணுமே இல்லையா?" என்று திடீரென்று கேட்டாள் பாமா.

"அதான் வரவில்லை! பார்த்தாயா, காரணம் இருக்கு!" என்றாள் லட்சுமி; பேசக்கூடாது என்று சுருக்கி மெல்ல பதிலளிக்கவும் கூசினவள்தான் - 'காரணம் கண்டுபிடித்த' உற்சாகத்தில் குரல் உரத்துவிட்டது. சட்டென இரண்டு மூன்று பேர் புருவம் நெறித்துக் திரும்பிப் பார்த்ததும் லட்சுமி தன் தவறை உணர்ந்தாள். மனதில் மட்டும் கோபம் - நீருண்ட சுண்ணாம்புக் கிளிஞ்சல் போலக் கொதித்தது. இத்தனை நேரம் பாமா நசநசத்தபோது யாரும் ஆட்சேபிக்கவில்லை. மறந்துபோய் ஒரே விநாடி பேசிவிட்ட தன்னைப் பார்த்து முறைக்கிறார்கள்! 'ஹும், என் குரல் வெண்கலம் தான்; பாட்டுப் பயின்று, சிறந்த பயிற்சி பண்ணி, என் குரல் கணீரென்றாகிவிட்டது. இந்தச் சபையிலே உட்கார்ந்து நான் பாடட்டும் - எப்படித்தான் கட்டுப்படமாட்டார்கள் ரசிகர்கள்! ஹும், நம் பாக்கியம் வேறே' என்று அந்தரங்கம் பொருமிற்று லட்சுமிக்கு - கடந்த காலத்தின் நினைவிலே!

"மன்னி, ஒரு வேளை அவர் வந்துவிட்டால் என்ன செய்வது? பாயில் உட்கார இடமில்லை என்ற சாக்கில் வெளியில் நாற்காலி போட்டால் தேவலை."

"உம், உம்"

"பெரியவர்களெல்லாம் கீழே உட்கார்ந்திருக்கும்பொழுது அவர் நாற்காலி கேட்கமாட்டார், மன்னி. சிவனே என்று வராதிருந்தால் தேவலையே!"

"வரமாட்டார் இனிமேல்; ஏன் அவஸ்தைப்படறே நீ! நீயாவது நன்றாகக் கேளேன். பாவம், அவருக்குத்தான் ஒட்டவில்லை!" என்று லட்சுமி தன் குரலை சிரமப்பட்டு அடக்கி பாமாவையும் அடக்கிவிட்டாள்.

பாமா பேசவில்லையே தவிர, மனசுக்குள்ளே பேசிக்கொண்டிருந்தாள் அப்புறம்! 'பெண் புத்தியே பின் புத்தி; நல்ல வேளையாக அவருக்கு யோசனைதான்! நான் எழுதிவிட்டேன் என்றதும் ஓடிவராமலிருந்தாரே! இந்த மட்டும் க்ஷேமம்' என்று ஆறுதல். 'இதோ - வித்வான் வாசிக்கும் காபி ராக கீர்த்தனையும், மோஹன ராகக் கிருதியும் கணவனுக்கு ரொம்பப் பிடித்தமானவை. எல்லாம் நல்ல நல்ல ராகங்கள்; சுகமான நடை, பிடிகள்; இனிமையான சஞ்சாரங்கள். கணவன் ரொம்ப ரசித்திருக்க வேண்டிய அம்சங்கள். ஆனால்.... கூடாது.'

நண்பரின் வீட்டில் நட்புரிமையுடன் கச்சேரி செய்ததனால் வித்வான் மங்களம் வாசிக்காமல் முடித்துவிட்டார். ஓரிரண்டு துக்கடாப் பாட்டுகள் வாசித்த பின், "மங்களம் கேட்க யாருக்குமே பொறுமை இருக்காது - எழுந்துவிடுவார்கள்; நான் இப்பொழுது வாசிக்கப் போகும் கடைசி அம்சத்தில் எல்லோரும் நிற்க வேண்டியதுதான் முறை; ஆனால், நான் மட்டும் உட்கார்ந்திருப்பேன், மன்னிக்கணும்" என்று புன்னகை மிளிரப் பகர்ந்தார் வித்வான். தேசீய கீதமாகிய 'ஜனகனமன' வாசித்தார்; ஏனையோரும் எழுந்து நின்றனர்.

'ஒரு போடு போட்டாரே!' என்று லட்சுமிக்கு பரம சந்தோஷம்.

பாமாவுக்கோ கணேசன் ரஸித்திருக்க வேண்டிய அம்சம் என்ற மனக்குறை தான்.

"வந்தாராம்மா உங்காத்துக்காரர்?" என்று அகிலாம்பாள் நினைவாகக் கேட்டாள்.

"இல்லை மாமி."

"உனக்குப் பாட்டு கேட்ட மாதிரியே இல்லையோ?" என்று மாமி கனிவாகச் சிரித்தாள்.

"ஆமாம் மாமி" என்றாள். லட்சுமி இடக்காக. "இல்லை மாமி... அப்படியென்ன...?" என்று பாமா தடுமாறினாள்.

அகிலாம்பாளிடம் விடைபெற்று வாசற்படி இறங்கி நடைபாதையில் வந்தபோது, வெளியில் ஒரு மோட்டார் காரினருகே ராஜமய்யர் நின்றுகொண்டு இவர்களையே எதிர்பார்த்திருந்தவராகத் தோன்றினார்!....... மோட்டாரின் முன்புறம்..... கணேசன்!

"எப்படீன்னா வந்தேள்?" என விளித்தாள் பாமா. "வந்தேன், கொழுப்பெடுத்துப்போய்" என்று அரைகுறைச் சிணுக்கமுடன் பதிலளித்தான் கணேசன். குற்றம் செய்த நெஞ்செனப் பாமாவுக்கு உள்ளூர உதைப்பு. "இப்போது ஒன்றும் பேசாதே" என்று அவளுடைய தோளை இடித்தாள் லட்சுமி, ஒரு கண் மாமனார்மேல் பதித்தபடியே.

"போகலாமா?" என்று கேட்டபடி மோட்டாரின் கதவைத் திறந்தார் ஒரு வாலிபர்.

"உம் உம்; போகலாம்; நன்றாக வந்தேண்டா அப்பனே! வாய்ப்பாட்டாவது இங்கே நன்றாகக் கேட்கும் - பிடில் நாதம் இந்த வித்வானுக்குக் குறைவு; 'மைக்'கும் இல்லை; மோட்டார் ஓட்டி மாதிரி காத்துக்கிடந்தேன் இங்கே" என்றான் கணேசன் அலுப்பாக.

"நான்தானே என் மோட்டாரின் நிஜ டிரைவர்; ஏண்டா உனக்கு வெட்கம்?" என்று கேட்டுக்கொண்டே, சக்கரத்தைப் பிடித்தார் கணேசனின் நண்பர்.

"நீ சொந்தக்காரன் காருக்கு" - இது கணேசன். ராஜமய்யர் நிதானித்துவிட்டு, "ஆபரேஷன் ஆகி ஒரு மாதம் கூட முடியாமல் வெளியில் இப்படிக் கிளம்பி வர சபலத்திற்கு இடங்கொடுத்துவிட்டதற்காகத்தான் வெட்கப்படுகிறான், வேறென்ன?" என்றார் நாசூக்காக.

"வீட்டு வழி இவனுடைய கார் வந்ததும் என்னவோ ஆசை, பாட்டு கேட்கலாமே என்று. வந்தபிறகுதான் உள்ளே வந்து உட்கார யோசனை. 'காரில்தான் இரேன்' என்று தன் ஜோலியைப் பார்க்க இவன் போவான் என்று தெரியவில்லை; பின் புத்திதான்" என்று கணேசன் அங்கலாய்த்தான்.

பேச்சை மாற்ற வேண்டிய ராஜமய்யர் வித்வான் செய்த பிடில் கச்சேரியைப் பற்றி விமரிசனம் தொடங்கி, இடையில் பெண்கள் சிலர் பேசின 'வம்பு' பற்றியும் குறிப்பிட்டார்.

பின் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த பாமாவிற்கு உயிர் துடித்தது. உள்ளம் படபடத்தது. லட்சுமியோ 'பேசாது இரு' என்கிற எச்சரிக்கையைச் செய்துவிட்டாள் மீண்டும்.

'எங்கள் இயல்பு மாறாது. பெண்களாகிய நாங்கள் அஞ்ஞானிகள், அசடுகள், அவசரக்காரிகள், பேச்சுக்காரிகள். இது எங்களுக்கே தெரிகிறதே! புத்தி, புத்தி' என்று ரோஷப்பட்டவாறே வேகமாய் காரைவிட்டு இறங்கினாள் பாமா, வீடு சேர்ந்ததும்.

நேரே அத்தையம்மாளிடம் போய் நின்றாள். "இதோ; ஆள்காரன் கொண்டு வந்து தந்தபோது கணேசு இருக்கவில்லை. காரில் போய்விட்டான்" என்றாள் அத்தை.

தன் அழைப்புக் கடிதத்தை மறைத்து எடுத்துக்கொண்டு பாமா, கணேசன் உடை மாற்றும் தனி இடத்திற்குப்போய், கடிதத்தை அவன் கையில் கொடாமலே கண்ணெதிரில் பிரித்துக் காட்டிப் படிக்கச் செய்து, அங்கேயே கிழித்தெறிந்தாள்.

"ஓஹோ!" என்றான் கணேசன். "ஆமாம்!" என்று சொல்லி வெளியேறினாள் பாமா.

இசை நிகழ்ச்சியைப் பற்றி நண்பகல் தகவல் வந்தது முதல் மாலை வரை, எல்லோருமே, கணேசன் போவதற்கில்லை, கேட்பதற்கில்லை என்ற தோரணையிலேயே இயங்கியிருக்கிறார்கள். இரணசிகிச்சை செய்து வலி கொண்டவன் என்ற ஊன்றிய காரணம் இருந்தது. அதை மறந்துபோய் செயலாற்றுவது சரியா? ஆசை, சபலம் என்று தோன்றிய பொழுது, சற்று சிந்தனை செய்திருந்தால் தவறு நேர்ந்திருக்காது; கணேசன் நண்பனின் காரைக் கண்டு விரைந்திருக்கமாட்டான்.

"ஆசை இருந்தால் தானாக வந்து கொள்ளட்டும்!" என்ற ஒரு நினைப்பு, இலேசாக அசிரத்தை, அலட்சியம் என்னும் பாவனையிலாவது தோன்றியிருந்தால், பாமா தவித்திருக்கவே வேண்டாம். இசையை ரசித்திருப்பாள். அப்படித் தோன்றாத குற்றம் பாமாவினுடையது!

பெண்ணாய்ப் பிறந்தவளின் கொற்றமும் இதுதானோ?

**********

(சுதேசமித்திரன், ஜூலை 26, 1956)